ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2247/32 - 2021 ඔක්තෝබර් මස 01 වැනි සිකුරාදා - 2021.10.01

2247/32 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 4/81 (II)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

24இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகிய நான் "கிரெகரி வாவி சூழற் பாதுகாப்பு இடப்பரப்பு" எனவழைக்கப்படும் இடப்பரப்புத் தொடர்பில் மேற்கூறப்பட்ட பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்டதும் 2007, மாச்சு 5 ஆந் திகதிய 1487/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II மற்றும் அட்டவணை III என்பவற்றை இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்:-

(1) அட்டவணை II இன் 15 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"16. நானு ஓயாவிலிருந்து நுவரெலியா வரை கேபிள்கார் கருத்திட்டம்.";

(2) அட்டவணை III இன் 15 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"16. நானு ஓயாவிலிருந்து நுவரெலியா வரை கேபிள்கார் கருத்திட்டத்தின் நிர்மாணம், தொழிற்பாடு மற்றும் பேணுகை என்பன, சூழற் பாதுகாப்பு இடப்பரப்பின்மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.";.

**மஹிந்த அமரவீர,**
சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
2021, செத்தெம்பர் 28.
10 - 151

1A - PG 5556 - 2520 (2021/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*